[திரு. து. ரவிக்குமார்] [2010 மே 12

நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கும், இப்படியான வங்கிப் பணிகளிலே பாதுகாப்பு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நேற்றுக்கூட இன்னொரு சம்பவம் நடந்து இருக்கிறது. புதுச்சேரியிலிருந்து பணம் கட்ட வந்த வங்கிப் பணியாளர்களை ஏமாற்றிவிட்டு, ஓட்டுநரே பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றார். ஆக, இத்தகைய சம்பவங்களையெல்லாம் தடுக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய மாநில அரசு ஒரு State Industrial Security Force-ஐ, எப்படி மத்திய அரசு C.I.S.F. என்று வைத்திருக்கிறதோ, அதுபோல ஒரு மாநில தொழில் பாதுகாப்புப் படையை நாம் உருவாக்க வேண்டும். அதற்கு இதுதான் சரியான தருணம். அத்தகைய நடவடிக்கை எடுக்குமாறு தங்கள்வாயிலாக நான் குறிப்பாகத் தமிழக முதல்வர் அவர்களை வலியுறுத்தி, அமர்கின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிலுரை. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேச வேண்டும். உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசிவிட்டார். (குறுக்கீடு) சரி, உங்கள் பெயரையும் சேர்த்துவிடச் சொல்கிறேன், உட்காருங்கள். நீங்களும் சேர்ந்து கருத்துச் சொன்னதாகக் கருதப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் காவல் நிலைய சரகம், பாபநாசம் கடை வீதி, கும்பகோணம்- தஞ்சாவூர் நெடுஞ்சாலையிலே உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் ஏ.டி.எம். மையத்தில் பணம் நிரப்பும் பொருட்டு, வங்கி அதிகாரிகளோடு, பாதுகாவலர் ராஜேந்திரன் ஒரு வாகனத்தில் சென்றபோது, 11-5-2010 அன்று பிற்பகல் சுமார் 3 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

முதலில் ஒன்றை நான் புரிய வைக்க விரும்புகிறேன். ஏ.டி.எம். மையம் என்று நாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு சரியான விளக்கம், ஏ.டி.எம். மையம் என்பது, தொலைதூரத்தில் நாம் சென்று விட்டால்கூட அங்கே நமக்குத் தேவைப்படுகின்ற பணத்தைப் பெறுவதற்கு உதவி செய்கின்ற ஒரு மையம் ஆகும். பணம் இல்லாமலேகூட ஓர் ஊரிலே சென்று சாப்பிடும்போது இந்த மையத்திலே பணத்தைச் செலுத்திவிட்டிருந்தால் அந்தப் பணம் அந்த நேரத்திலே நமக்குப் பயன்படும். அதுதான் ஏ.டி.எம். மையம் என்பதாகும்.

2010 மே 12] [கலைஞர் மு. கருணாநிதி]

முற்பகல் 11-10

அங்கே பாதுகாவலர், வங்கி அலுவலர்கள், இவர்களுக்கிடையே ஏற்பட்ட ஒரு பிரச்சினை. அதிலேதான் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் என்ற அளவிற்குச் சென்று ஓர் உயிர் பலியாகியிருக்கிற நிகழ்வும் நடைபெற்றிருக்கிறது.

வங்கி அலுவலர்கள், ஏ.டி.எம். மையத்திலே சென்று இயந்திரத்திலே பணத்தை நிரப்பிக் கொண்டிருந்தபோது, பாபநாசத்தைச் சேர்ந்த சோம்நாத்ராவ், பாரதிதாசன், சீனிவாசன், சாமிநாதன் மற்றும் ராஜராஜன் ஆகியோர் அவர்களுடைய ஏ.டி.எம். கார்டுமூலம் பணம் எடுக்க அனுமதிக்குமாறு பாதுகாவலர் ராஜேந்திரனிடம் கேட்டுள்ளார்கள்.

அவர், தற்போது பணம் நிரப்பும் பணி நடந்து கொண்டுள்ளது, அப்பணி முடிந்தவுடன் நீங்கள் பணம் எடுத்துக்கொள்ளலாமெனக் கூற, அவர்கள் பாதுகாவலரோடு தகராறு செய்து ஏ.டி.எம். மையத்திற்குள்ளே செல்ல முயற்சித்திருக்கிறார்கள்.

இதைப் பார்த்த பொது மக்கள் அங்கு கூடியிருக்கிறார்கள். அப்படிக் கூடிய பொது மக்களுக்கும், பாதுகாவலர் ராஜேந்திரனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இப்படி தனிப் பாதுகாவலர்களை நியமித்துக்கொள்வதில் நாம் சட்டங்களை மீறிவிடக்கூடாது, ஜாக்கிரதையாக இருக்கவேண்டும், இதற்கு ஓர் ஒழுங்குமுறை வேண்டுமென்ற கருத்துகளை நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும் இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

அதற்கு உரிய பதிலை நான் அளிப்பதாக இருந்தால், இது எல்லா நேரங்களிலும் சகஜமாக நடைபெறுகின்ற ஒரு நிகழ்ச்சி அல்ல. சந்தர்ப்பவசத்தால், சில முன்கோபிகள், அவசரக்காரர்கள், ஆத்திரக்காரர்கள் கையிலே துப்பாக்கி கிடைத்துவிடுகிற காரணத்தால் ஏற்படுகிற நிகழ்ச்சி இது. அவ்வப்பொழுது இந்த நிகழ்ச்சிக்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்த்து, ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்க எந்தவொரு அரசும் கடப்பாடு உடையது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே சோம்நாத்ராவ், பாரதிதாசன், சீனிவாசன், சாமிநாதன் மற்றும் ராஜராஜன் ஆகியோர் காயமடைந்தார்கள். இதைத் தொடர்ந்து அக்கம்பக்கமிருந்த பொது மக்கள் ஏ.டி.எம்.

மையத்திற்குக் கூட்டமாக வருவதைப் பார்த்து, பாரத் ஸ்டேட் வங்கி அலுவலர்கள் வாகனத்தை விட்டுவிட்டு, அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அங்கு கூடிய பொது மக்களைப் பார்த்து பாதுகாவலர் ராஜேந்திரன் மிரட்டவே, பொது மக்கள் ராஜேந்திரனை ஏ.டி.எம். அறைக்குள்ளே தள்ளி ஷட்டரை மூடிவிட்டார்கள்.

இதற்கிடையில், தகவலறிந்த தஞ்சாவூர் ஊரக உட்கோட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர், பாபநாசம் காவல் நிலைய ஆய்வாளர், உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வம், காவலர்கள் மற்றும் பாபநாசம் வட்டாட்சியர் ஆகியோர் சம்பவ இடம் சென்று, ஏ.டி.எம். அறைக்குள் இருந்த பாதுகாவலர் ராஜேந்திரனை ஷட்டரைத் திறந்து வெளியே கொண்டு வந்து, காவல் துறை வாகனத்திலே ஏற்ற முற்பட்டுள்ளார்கள்.

அப்போது பொது மக்கள் அந்தப் பாதுகாவலர் ராஜேந்திரனை எதிர்த்து ஆவேசமாக முழக்கமிட்டுள்ளார்கள். அப்போது காவல் ஆய்வாளர், ராஜேந்திரனிடமிருந்த இரட்டைக் குழல் துப்பாக்கியைக் கைப்பற்றி, உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வத்திடம் கொடுத்துள்ளார்.

ராஜேந்திரன் திடீரென்று உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வத்திடமிருந்த துப்பாக்கியைப் பறிக்க முயல, உதவி ஆய்வாளர் தடுத்தும், ராஜேந்திரன் அவரிடமிருந்து துப்பாக்கியைப் பறித்து, உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வத்தை நோக்கிச் சுட்டிருக்கிறார். உடனே காவல் துறையினர் ராஜேந்திரனைக் கைது செய்து, துப்பாக்கியைக் கைப்பற்றியுள்ளார்கள். குண்டுக் காயம்பட்ட உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வத்தை பாபநாசம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குக் கொண்டு சென்றபோது, அவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் அறிவித்துள்ளார்கள். காயமடைந்த சோம்நாத்ராவ் மற்றும் நான்கு பேர் தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். கைது செய்யப்பட்டுள்ள வங்கிப் பாதுகாவலர் ராஜேந்திரன், நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முற்பகல் 11-15

இது சம்பந்தமாக பாபநாசம் வட்டாட்சியர் அளித்த புகாரின்பேரில், பாபநாசம் காவல் நிலைய குற்ற எண் *105/2010*,

2010 மே 12] [கலைஞர் மு. கருணாநிதி]

ச/பி. 307, 302 இ.த.ச. மற்றும் 25 (1) (பி) ஆயுதச் சட்டப்படி வழக்குப் பதிவு செய்து, தஞ்சாவூர் ஊரகக் காவல் துணைக் கண்காணிப்பாளர் விசாரணை மேற்கொண்டு வருகிறார். கடமையாற்றியபோது மறைந்த காவல் துறையின் உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வத்தின் குடும்பத்தினருக்கும், அவரோடு பணியாற்றிய நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிர் இழந்த உதவி ஆய்வாளர் பன்னீர்செல்வத்தின் குடும்பத்திற்கு அரசின் சார்பில் காவலர் தனது கடமையைச் செய்யும்போது, அதன் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டால் (Died while in action) வழங்கப்படும் ரூபாய் 5 இலட்சம் மற்றும் இறந்தவரின் குடும்பத்திற்கு அவர் இறுதியாக பெற்ற முழு ஊதியம்—அவர் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். மேலும், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவரது குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இது தவிர, இறந்த உதவி ஆய்வாளரின் வாரிசு ஒருவருக்கு, அவரது கல்வித் தகுதிக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

இச்சம்பவம், ஏ.டி.எம். மையத்தில் ஏற்பட்ட தகராறில் வங்கிப் பாதுகாவலர், பொது மக்களிடம் வரம்பு மீறி நடந்து கொண்டதால் நடந்த ஒரு எதிர்பாராத நிகழ்வாகும். காவல் துறையினர், பணிகளில் ஈடுபடும்போது இதுபோன்று எப்பொழுதாவது எதிர்பாராமல் நடைபெறும் சில சம்பவங்களை வைத்து, காவல் துறையினருக்குப் பாதுகாப்பான சூழ்நிலையில்லை என்று கூறுவது ஏற்புடையதல்ல. மொத்தமாக அப்படிக் குறை சொல்லக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், இதுபோன்ற சம்பவங்களுக்கு ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமேயானால், 1965 ஆம் ஆண்டு இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி நாடெங்கும் நடைபெற்றபோது, செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு போலீஸ்காரர் உணர்ச்சி வேகத்தில், கையிலிருந்த துப்பாக்கியால் அங்கேயிருந்து சுட்டுக்கொண்டேயிருந்தான். ஏன் சுடுகிறாய் என்று கேட்டபோது, அவர் இந்தி எதிர்ப்பு வாசகங்களைச் சொல்லிக்கொண்டு சுட்டுக்கொண்டிருந்தார். இப்படிப்பட்ட ஆவேசம், வெறி, எந்த நேரத்திலும் ஏதோ ஒரு காரணத்தினால் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படுவதுண்டு. அந்த மனிதன் தப்பித் தவறி, போலீஸ்காரராக

இருந்தால், அதனால் போலீஸ் துறை முழுவதும் அப்படிப்பட்டது என்று நாம் தீர்மானித்து விடக்கூடாது. குற்றம் செய்த மனிதர்களில் ஒரு மனிதன் போலீஸில் இருந்தான் என்ற முறையிலேதான் இதை எடுத்துக்கொள்ள வேண்டுமேயல்லாமல், போலீஸ் துறையே இப்படிப்பட்டது என்ற முடிவுக்கு தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் வரக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்தக் குடும்பத்திற்கு இந்த அளவில் உதவி செய்யப்பட்டிருக்கிறது. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக விசாரித்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

(அ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஆறு பேரை பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தங்கள் தீர்மானத்தை முன்மொழியலாம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் அலுவல்கள் நடைபெறாது இடைமறித்தும், பேரவையின் விதிகளுக்கு மாறாக அவையில் குந்தகம் செய்து வருவதாலும், சட்டமன்றப் பேரவை விதி *121* உள் விதி *(2)*-ன்கீழ், இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திருவாளர்கள் வே. செந்தில் பாலாஜி, கோ. அரி, செ.ம. வேலுசாமி, டி. ஜெயக்குமார், வி.பி. கலைராஜன் மற்றும் எல். ரவிச்சந்திரன் ஆகியோரை *12-5-2010, 13-5-2010* ஆகிய இரண்டு நாட்கள் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கம் செய்ய வேண்டும்"

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.